06.10.2025

OS No: 55/2014

பி.வா.சா.1 திரு. பழனியப்பன் த/பெ ராமையா

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நானும் வாதியும் வேலங்குடி கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு 30.08.2007 தேதிய கிரைய பத்திரத்தின் அடிப்படையில் நான் கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.1 தான் நான் கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தின் நகல் என்றால் சரிதான். (அது பி.வா.சா.ஆ.1ஆகவும் குறியிடு செய்யப்பட்டுள்ளது). நான் கிரையம் பெற்ற சொத்திற்கு பட்டா எண். 2654 என பட்டா ஏற்பட்டுள்ளது மேற்படி பட்டா வா.சா.ஆ.2 ஆக என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். அதில் தாவா சொத்து உட்பட வேறு சொத்துக்களும் உள்ளது என்றால் சரிதான். பாண்டிச்சேரியில் வியாபாரம் விசயமாக எவ்வளவு நாட்கள் இருந்தேன் என்றால் 30 வருடமாக இருந்தேன். அவ்வப்போது திருவிழா காலங்களில், நல்லது கெட்டது நிகழ்வுகளுக்கும் எங்களது ஊருக்கு வந்து செல்வே என்றால் சரிதான். வாதியை எனக்கு நான் பிறந்தது முதல் தெரியும் என்றால் சரிதான். 2013ம் வருடம் வரை வாதியுடன் எனக்கு இனக்கமான உறவு இருந்தது என்றால் சரிதான். நான் திருப்பத்துார் முன்சீப் நீதிமன்றத்தில் தாவ வழக்கின் வாதியான அப்துல் ரகுமான் மீது ஒரு சிவில் வழக்கு OS 28/2014 என்ற வழக்கினை தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் தாவா சொத்து எனக்கு பாத்தியம் என விளம்புகை பரிகாரம் மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரமும் தாவா வழக்கின் வாதிக்கு எதிராக கேட்டிருந்தேன் என்றால் சரிதான். மேற்படி OS 28/2014 வழக்கானது மாண்புமிகு மாவட்ட நீதிமன்ற உத்தரவின் பெயரில் சார்பு நீதிமன்றம் சிவகங்கைக்கு மாற்றப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நான் தாக்கல் செய்த வழக்கும் அப்துல் ரகுமான் எனது மீது போட்ட வழக்கும் ஒன்றாகவே நடைபெற்று வந்தது என்றால் சரிதான். OS 28/2014 வழக்கினை நான் மேல் நடத்தாத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா வழக்கிற்கு முன்பே OS 28/2014 வழக்கினை

நான் தாக்கல் செய்திருந்தேனா என்றால் ஆமாம். வாதி எனக்கு வங்கி மூலகமாக பணம் அனுப்பியதற்கான ஆதரவு தான் வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 என்றால் சரிதான். வாதி எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் வா.சா.ஆ.7 பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். எனது பதில் அறிவிப்பில் வட்டிக்காக பணம் பெறப்பட்டது என விவரம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது எதிர் வழக்குரையில் வாதியிடம் வட்டிக்காக பணம் நான் பெற்றேன் என்பதாக விவரம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. எனது கையெழுத்தை வாதி மோசடி செய்து விட்டார் என்பதாக வாதியின் மீது காலவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்தத்தில் உள்ள என்னுடைய கையெழுத்தும் எனது எதிர் வழக்குரையில் உள்ள எனது கையெழுத்தும் ஒன்றாக உள்ளதா என்றால் இல்லை வெவ்வேறாக உள்ளது. வா.சா.ஆ.3 மற்றும் எதிர் வழக்குரையில் உள்ள எனது கையெழுத்தை நிபுணர் ஆய்வறிக்கைக்காக ஒப்பிட கோரி வாதி மனு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நிபுணர் அறிக்கைக்காக அனுப்பப்பட்ட OS No.92/2021 ( Old No-OS No.28/2014) உள்ள எனது கையெழுத்தும் வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்தத்தில் உள்ள எனது கையெழுத்தும் ஒரே மாதிரியாக உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.3, OS No.92/2021 வழக்குரை மற்றும் தாவா வழக்கில் உள்ள எனது எதிர் வழக்குரையில் கண்ட எனது கையைழுத்துக்களை கையெழுத்து நிபுணர் தந்த அறிக்கையில் ஒரே மாதிரியாக உள்ள கையெழுத்து என அறிக்கை தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.3ல் உள்ள கையெழுத்து என்னுடையது என்றும் வழக்கிற்காக என்னுடைய கையெழுத்து இல்லை என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஒப்பந்தத்தின் அடிப்படையில் நான் தாவா சொத்தை கிரையம் செய்து தர வாதியுடன் பத்திரம் ஏற்படுத்த வேண்டும் என்றும், பாக்கி கிரைய தொகையை பெற்று கொண்டு வாதிக்கு தாவா சொத்தில் கிரையம் எழுதி தர வேண்டும் என்றால் சரியல்ல. வாதி என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளாரா என்றால் கண்டவராயன் பட்டி காவல்

நிலையத்தில் வாய் மொழியாக புகார் கொடுத்திருந்தார், மேற்படி புகாரின் பெயரில் தொலைபேசி வாயிலாக போலீசார் என்னை விசாரித்த போது சிவில் வழக்கு உள்ள விவரத்தை நான் சொன்னேன், போலீசார் நீதிமன்றத்தில் வழக்கு பார்த்துக்கொள்ள அறிவுருத்தினர். வாய் மொழியாக வாதி என்ன புகார் கொடுத்திருந்தார் என்றால் முதன் முறையாக பணம் கொடுத்தது சம்மந்தமாகவும், இரண்டாவது முறையாக தாவா சொத்தில் கொட்டகை போட்டிருந்தது சம்மந்தமாகவும் புகார் கொடுத்ததாக போலீசார் என்னிடம் தெரிவித்தனர். வா.சா.ஆ.4 மற்றும் 5 ன் மூலமாக ரூ.1 லட்சம் மட்டுமே நான் வாதியிடம் கடனாக பெற்றுள்ளேன் வேறு எந்த தொகையும் கடனாக பெறவில்லை என்றால் சரிதான். நான் குறிப்பிடும் சொத்தானது சர்வே எண். 485/2B, 485/6, 7, 8, 9 என்றால் சரிதான். மேற்படி சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் 6 செண்டு ஆகும். வேலங்குடி கிராமத்தில் காசி மகன் குணாலன் என்ற நபர் உள்ளாரா என்றால் நான் பாண்டிச்சேரியில் இருப்பதால் தெரியாது. வாதிக்கு, சேக் அப்துல்லா என்ற நண்பர் ஒருவர் உள்ளார் என்றால் தெரியாது. தாவா சொத்து சம்மந்தமான எனது கிரைய பத்திரம், பட்டா ஆகிய ஆவணங்களின் நகல்களை வாதியுடமோ அல்லது வேறு யாரிடமோ கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. பட்டா மாறுதலுக்காக 2010ம் வருடம் வேலங்குடி கிராம நிர்வா அலுவலகரான ஆறுமுகம் என்பவரிடம் மேற்படி ஆவணங்களின் நகல்களை கொடுத்திருந்தேன். மேற்படி சங்கதியை எனது எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் கிரைய ஒப்பந்த பத்திரத்திற்கு ஆதரவாக தாவா சொத்தின் கிரைய பத்திரம் பட்டா ஆகியவற்றின் நகல்களை வாதியிடம் கொடுத்தேன் என்றும் வழக்கிற்காக இல்லை என தற்போது மறுக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியிடம் 2013ம் வருடம் ரூ.1 லட்சம் வாங்கிய கடனை தற்போது வரை திருப்பி செலுத்திவிட்டேனா என்றால் வாதியிடம் திருப்பி செலுத்திட எனது வக்கீலிடம் கொடுத்துள்ளேன். மேற்படி பணத்தை எனது வழக்கறிஞர் வாதியிடம் கொடத்துவிட்டாரா அல்லது இல்லையா என எனது வக்கீலிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் வாதியிடம் ரூ.1 லட்சத்தை 2013ம் வரும் பெற்று

கொண்டு அதை தற்போது வரை திருப்பி செலுத்த வில்லை என்றும் வக்கீலிடம் கொடுத்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்தை தவிர வேறு சொத்துக்கள் வேலங்குடி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். வாதி வியாபாரம் செய்து நன்கு வசதியாக உள்ளார் என்றால் சரிதான். தாவா வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் எனக்கும் வாதிக்கும் பிரச்சனை என்றால் சரிதான். வாதி பாக்கி கிரைய தொகையை இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரிடும் வழக்கின் நடைமுறையை வாதி கடைபிடித்துள்ளார் என்றும் நான் ஒப்பந்தத்தை நிறைவேற்றிட மறுத்து தாவா வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணம் 2013 ஆண்டு முதல் தற்போது வரை என் கைவசம் தான் இருந்து வந்தது என்றால் சரிதான்.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.10.06 18:02:22 +0530